**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | |
|---|---|
| **Calendar** | : **CC. 144 /2015** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.1 சிவசக்தி** |
| **Father's Name** | : **சின்னன்** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 28.12.2020

மு.வி:

நான் குஞ்சம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சிப்பட்டியலிலுள்ள சாட்சிகள் 1,2,4முதல் 7 வரையிலானவர்களை எனக்கு தெரியும். சாட்சி ராமன் 3மாதத்திற்கு முன்பு இறந்துவிட்டார். விபத்தில் இறந்தபோன நபர் 1வது சாட்சி ராமனின் மகன் அடைக்கலம். நான் சம்பவத்தை நேரில் பார்த்தேன். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு காலை 8.30 - 9.00 மணியளவில் மதுரை-தேனி ரோட்டில் செங்குளத்துமேடு அருகே உள்ள ரைஸ்மில்லுக்கு அருகே இடதுபுறமாக சைக்கிளில் நான் மற்றும் சாட்சி ராமன் (இறந்துவிட்டார்) மற்றும் விபத்தில் இறந்துபோன நபர் ராமனின் மகன் அடைக்கலம் ஆகியோர் முன்னும்பின்னுமாக சென்று கொண்டிருந்தோம். முதலில் அடைக்கலம் சென்று கொண்டிருந்தார். அவனுக்கு பின்னால் ராமரும், அவருக்கு பின்னால் நானும் தனித்தனியே சைக்களில் சென்று கொண்டிருந்தோம். டம் என்று சத்தம் கேட்டதும் பார்த்தபோது எங்களுக்கு பின்னால் தேனியை நோக்கி வந்த கல்லூரி வாகனம் (பேருந்து) மோதி அடைக்கலம் கீழே விழுந்துவிட்டார். பேருந்து அங்கேயே நின்றுவிட்டது. ஆட்கள் சம்பவ இடத்தில் கூடிவிட்டார்கள். பேருந்து ஓட்டுநரை நான்

பார்த்தேன். நேரில் பார்த்தால் அடையாளம் காண்பிக்கமுடியும். அடைக்கலத்திற்கு பின் தலையில் அடிபட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு அடைக்கலத்தை கொண்டு சென்றார்கள். நான் ஆம்புலன்சுக்கு பின்னால் மருத்துவமனைக்கு சென்றேன். ராமன் நடந்த சம்பவத்திற்கு எதிரிமீது நடவடிக்கை வேண்டி புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

முதல் விசாரணையில் சொன்னதுபோல் தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். சாட்சி ராமனுக்கு உங்களது சகோதரியை திருமணம் செய்து கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். அடைக்கலத்திற்கு பின்னால் ராமன் எவ்வளவு தூரத்தில் வந்தார் என்றால் 60அடி தூரம் இருக்கும். நீங்கள் ராமனுக்கு பின்னால் எவ்வளவு தூரத்தில் வந்தீர்கள் என்றால் பக்கமாகதான் வந்தேன். உங்களை பேருந்து கடந்து போய்தான் அடைக்கலத்தை அடித்தது என்று சொன்னால் சரிதான். நீங்கள் டம் என்று சத்தம் கேட்டுத்தான் சம்பவத்தை பார்த்தீர்கள் என்று சொன்னால் சரிதான். சாட்சி ராமன் அடைக்கலம் விபத்தில் அடிபட்டு விழுந்து விட்டான் என்று சொன்ன பின்பு தான் நீங்கள் சென்று பார்த்தீர்கள் என்று சொன்னால் சரிதான். பேருந்தின் ஓட்டுநரை இவர்தான் என போலீசார் சொல்லிதான் உங்களுக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். பேருந்தின் எந்த பகுதி அடைக்கலம் மீது மோதியது என்று உங்களுக்கு தெரியுமா என்று சொன்னால் தெரியாது.

ம.வி.இல்லை.

S.d./ Sivasakthi
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. R.M.Marimuthu
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.